பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**15 08 2026 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

**1.** நாட்டிற்காக இன்னுயிரை ஈந்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தை நினைவுகூர்வதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**2.** சுதந்திர தின வாழ்த்து தெரிவித்த உலகத் தலைவர்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார்.

**3.** வருமானவரி செலுத்துவோர், வெளிநாடுகளில் உள்ள சொத்துக்களை வெளிப்படுத்துவதற்கான திட்ட அறிவிக்கையை மத்திய நேரடி வரிகள் வாரியம் வெளியிட்டுள்ளது.

**4.** இந்தோனேஷியாவில் இன்று நேரிட்ட நிலநடுக்கத்தில் **38** பேர் உயிரிழந்தனர்.

**5.** இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியா **2** விக்கெட் இழப்பிற்கு **288** ரன் எடுத்துள்ளது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

நாட்டின் 80-ஆவது சுதந்திர தினத்தையொட்டி, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில அவர் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டிற்காக இன்னுயிரை ஈந்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தை நினைவுகூர்வதாக தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஜனநாயகத்தை வலுப்படுத்த பல்லாண்டுகளாக சேவையாற்றிய தலைவர்களை நினைவுகூர்வதாக தெரிவித்துள்ளார்.

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா, பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைந்து வருவதாக திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

மக்கள் பங்களிப்புடன் நிலையான அரசும், உயிரோட்டம் மிக்க ஜனநாயகமும் நாட்டில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

80-ஆவது சுதந்திர தினத்தையொட்டி, தில்லி செங்கோட்டையில் தேசியக்கொடி ஏற்றிவைத்து உரையாற்றிய பிரதமர், அரசியலமைப்புச் சட்டமும், உறுதியான நீதி கட்டமைப்பும் நாட்டு மக்களை செம்மையான பாதையில் வழிநடத்தி செல்வதாக குறிப்பிட்டுள்ளார்.

உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு மேலோங்கியிருப்பதாக தெரிவித்த பிரதமர், உலகின் முக்கிய நாடுகளுடன் முன்எப்போதும் இல்லாத அளவுக்கு தாராள வர்த்தக ஒப்பந்தங்கள் மேற்கொண்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வலுவான பொருளாதாரத்தை உருவாக்க இது பேருதவியாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு தொழில் நிறுவனங்கள் சர்வதேச அளவிலான வர்த்தக வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், உலகச் சந்தையை எதிர்கொள்ளும் வகையில் குறைந்த உற்பத்திச் செலவில் தரமான பொருட்களை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

உள்நாட்டு தேவைக்கான இறக்குமதியை குறைத்து, மக்களுக்கு தரமான பொருட்களை அளித்திட வேண்டும் என்றும் பிரதமர் அறிவுறுத்தினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வமும், திறனும் நாட்டு மக்கள் மனதில் வேரூன்றி இருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

கடந்த ஏழு ஆண்டுகளில் நாட்டின் பணிகலாச்சாரம், சிந்தனை மற்றும் செயல்திறனில் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதாக அவர் கூறினார்.

கடுமையாக உழைக்க வேண்டும் என்ற சிந்தனை மக்களிடம் குறிப்பாக இளைஞர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் உள்ளிட்டோரிடம் இருப்பதால் நமது பெரிய கனவுகளை சாத்தியமாக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசும், மாநில அரசுகளும் இணைந்து, வளர்ச்சியின் அடுத்தக்கட்டத்திற்கான சீர்திருத்தங்களை முன்னெடுத்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

நாட்டின் உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட கதிசக்தி திட்டத்தின்மூலம், போக்குவரத்து கட்டமைப்பு பெரிய அளவில் விரிவுபடுத்தப்பட்டிருப்பதாகவும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

நாட்டின் 80-ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி வாழ்த்து தெரிவித்த உலகத்

தலைவர்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பிரான்ஸ் அதிபர் திரு இமானுவெல் மெக்ரான், மாலத்தீவு அதிபர் டாக்டர் முகமத், பூட்டான் பிரதமர் **Tshering Tobgay,** ஸ்லோவாக் அதிபர் **Peter** உள்ளிட்டோருக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

நாட்டின் **80-**ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, உலகத் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

சுதந்திர தினத்தையொட்டி, ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புடின் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவுகள் மேம்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

இஸ்ரேல் அதிபர் **Herzog** வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இந்தியா — இஸ்ரேல் இடையேயான நட்புறவு வளர்ச்சியடைந்து வருவதாக தெரிவித்தார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு மார்கோ ரூபியோ வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இந்தியா — அமெரிக்கா இடையேயான உறவுகள் வலுவடைந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் அதிபர் திரு தர்மன் சண்முகரத்னம் வெளியிட்டுள்ள செய்தியில், இரு நாடுகளுக்கு இடையே டிஜிட்டல் தொழில்நுட்பம், திறன் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

மாலத்தீவு தேசிய கட்சித்தலைவர் திரு முகமது நாசிம் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இந்தியாவின் வளர்ச்சி மூலம் மாலத்தீவும் பயனடைந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் தூதர் **Reuven**, அர்ஜென்டினா தூதர் மரியானோ, இலங்கை தூதர் **Mahishini** உள்ளிட்ட பல்வேறு நாட்டு தூதர்களும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>>

நாட்டின் **80**-ஆவது சுதந்திர தினம் வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களில் இன்று கொண்டாடப்பட்டது.

சிங்கப்பூரில் தூதரக அலுவலர் **Shilpak Ambule** தேசியக்கொடியை ஏற்றிவைத்து அங்குள்ள இந்திய வம்சாவளியினருடன் உரையாடினார்.

சீனா தலைநகர் பெய்ஜிங்கில் தூதர் விக்ரம் துரைசாமி, இந்திய தூதரகத்தில் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

சுதந்திர தினத்தையொட்டி நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு அவர் பரிசுகளை வழங்கினார்.

ஹாங்காங்கில் துணை தூதர் ராஜேஷ் நாயக் தலைமையில் சுதந்திர தின நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

<<<<<<>>>>>>

நாட்டின் **80-**ஆவது சுதந்திர தினத்தையொட்டி, தில்லி செங்கோட்டை கொத்தளத்தில் முதல் முறையாக வந்தே மாதரம் தேசிய பாடல் இசைக்கப்பட்டதை தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

வந்தேமாதரம் எனும் தேசியப்பாடலின் வீர முழக்கம் ஒட்டுமொத்த தேசத்தையும், தேசப்பற்று மற்றும் தேசிய பெருமிதத்தால் திளைக்கச் செய்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

நாட்டின் 80-ஆவது சுதந்திர தினம் இன்று மாநிலங்களிலும் கொண்டாடப்பட்டது.

தெலங்கானா தலைநகர் ஹைதராபாத் மக்கள் மாளிகையில் ஆளுநர் திரு சிவ்பிரதாப் சுக்லா தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்து வருவதாக அவர் கூறினார்.

கர்நாடக தலைநகர் பெங்களூவில் முதலமைச்சர் திரு டி கே சிவகுமார் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

கர்நாடகாவின் பொருளாதாரம் வரும் 2047-ஆம் ஆண்டுக்குள் 3 ட்ரில்லியன் டாலர் அளவுக்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அனைத்து பள்ளிகளிலும் ஆறாவது வகுப்பில் இருந்து செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப கல்வி வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் தேசியக்கொடியை முதலமைச்சர் திரு சுவேந்து அதிகாரி ஏற்றிவைத்தார்.

பின்னர் கொல்கத்தா ஆகாஷ்வாணி மூலம் சுதந்திர தின உரையாற்றிய அவர், சுதந்திரப் போராட்ட வீரர்கள், நேதாஜி சுபாஷ்

சந்திரபோஸ், டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜி, **Khudiram Bose** உள்ளிட்டோரின் தியாகங்களை நினைவுகூர்ந்தார்.

பஞ்சாபில் எல்லை மாவட்டமான **Ferozepur-**ல் தேசியக்கொடியை ஏற்றிவைத்த முதலமைச்சர் திரு பகவந்த் சிங் மான், பாதுகாப்புப்படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

ஜம்மு காஷ்மீரின் ஸ்ரீநகரில் முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா தேசியக்கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

ஒடிஷாவில் சுதந்திர தின உரையாற்றிய முதலமைச்சர் திரு **Mohan Charan Majhi** அம்மாநிலத்தில் கல்வி, முதலீடு, கட்டமைப்பு, வேலைவாய்ப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றார்.

ஒடிஷாவில், அரசு கல்வி நிறுவனங்களில் மழலையர் கல்வி முதல், முதுநிலை வரை இலவச கல்வி வழங்கப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

சுதந்திர தினத்தையொட்டி, புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பிரகாஷ் பாபு தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில், பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

சுதந்திர தின விழாவின் ஒரு பகுதியாக இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்க பேரணி நடைபெற்றது.

இதில் ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>>

சுதந்திர தினத்தையொட்டி, புதுதில்லி ஆகாஷ்வாணி வளாகத்தில் தலைமை இயக்குநர் திரு ராஜீவ் குமார் ஜெயின் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய சுதந்திரப் போராட்ட வீரர்களை நினைவுகூர்வதாக தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு அனைவரும் பங்காற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

வருமானவரி செலுத்துவோர் வெளிநாடுகளில் உள்ள சொத்துக்களை வெளிப்படுத்துவதற்கான திட்ட அறிவிக்கையை மத்திய நேரடி வரிகள் வாரியம் வெளியிட்டுள்ளது.

நாளை முதல் இது அமலுக்கு வரும் என்று அந்த வாரியம் கூறியுள்ளது.

வரும் டிசம்பர் 31-ஆம் தேதிக்குள் இந்த திட்டத்தின்கீழ், வெளிநாட்டில் உள்ள சொத்துக்கள் தொடர்பான விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான தகவல்களை வருமான வரித்துறையின் இணையதளத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இந்தோனேஷியாவில் இன்று நேரிட்ட நிலநடுக்கத்தில் 38 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் Flores கடலோரப்பகுதியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7 புள்ளி 7-ஆக பதிவாகியுள்ளது.

இதனையடுத்து, இந்தோனேஷியாவை ஒட்டியுள்ள கடல் பகுதியில் ஒரு மீட்டர் உயரத்திற்கு சுனாமி அலைகள் எழுந்தது.

Flores பகுதியில் ஏராளமான கட்டிடங்கள் சேதமடைந்தன.

இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்க நடவடிக்கை எடுத்து வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தையடுத்து, பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு, போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

<<<<<<>>>>>>

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்சில் 2 விக்கெட் இழப்பிற்கு 288 ரன் எடுத்துள்ளது.

இந்தியாவின் தேவ்தத் படிகல் அதிரடியாக ஆடி 131 ரன்னுடன் களத்தில் உள்ளார்.

Galle-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

--------------

உலகக் கோப்பை ஹாக்கிப்போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா - வேல்ஸ் அணியை வென்றது.

நெதர்லாந்தின் Amstelveen-ல் நடைபெற்ற இப்போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் இந்தியா வெற்றிபெற்றது.

<<<<<<END>>>>>>